## மாநகர் மன்ற அதிகாரிகளுக்கு எதிராக மிரட்டல்

# 57 வயது ஆடவர் கைது




கோலாலம்பூர் ஏப்ரல், ஏப். 10-

சமூக வளைத்தளத்தின் வழி கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகளுக்கு எதிராக மருட்டல் விடுத்த ஆடவரை போலீசார் கைது செய்துள்ளனர்.அமலாக்க அதிகாரி ஒருவர் இது, இது குறித்து போலீசில் புகார் ஒன்றை தாக்கல் செய்ததை முன்னிட்டு 57 வயது ஆடவர் ஒருவரை செராஸ் மாவட்ட போலீஸ் தலைமையகத்தின் குற்றவியல் புலனாய்வு இலாகா பிரிவு கைது செய்துள்ளது.

கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகளுக்கு எதிராக மருட்டல் விடுப்பதும் அதிகாரிகளை அவமதிக்கும் வண்ணம் உரையாடல் இடம் பெற்றிருந்தது. கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்க அதிகாரிகளுக்கு எதிராக தேச நிந்தனைக்குரிய அறிக்கைகள் இந்த சந்தேகப்பேர்வழி விடுத்துள்ளார் என்று கோலாலம்பூர் போலீஸ் தலைவர் டத்தோ முகமது இசா தெரிவித்தார். அரசு ஊழியர்கள் தங்களின் கடமையினை கண்ணுங் கருத்துமாக செயல்படுத்தி வருகிறார்கள். சட்டத்தை அமல்படுத்தும் நடவடிக்கையினை நன்கு நிறைவேற்றி வருகிறார்கள்.

சந்தேகப்பேர் வழி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் சமூக வலைத்தள வசதிகளை துஷ்பிரயோகம் செய்வதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது 1998 தொடர்புத்துறை மற்றும்